# மூன்றாம் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

பத்தாம் வகுப்பு பதிவு எண்:

## தமிழ்

நேரம்: 3.00 மதிப்பெண்கள்: 100

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 15 x 1 = 15

1. திருமந்திரத்தில் மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியவர் ______.
   அ) திருமூலர் ஆ) திருவள்ளுவர் இ) கம்பர் ஈ) ஔவையார்
2. முத்துக்குளிக்கும் கொற்கையின் அரசர் ______
   அ) அந்தக கவி வீரராகவர் ஆ) அதிவீரராமபாண்டியர்
   இ) குமரகுருபரர் ஈ) புகழேந்தி புலவர்
3. பிறருக்கு உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனாரால் குறிப்பிடப்படும் சொல் ______
   அ) ஈதலின்பம் ஆ) கொடை இ) உதவியாண்மை ஈ) வரையாது வழங்குதல்
4. தோற்பாவைக் கூத்து ______ என்று மாற்றம் பெற்றுள்ளது.
   அ) கரகாட்டம் ஆ) பொம்மலாட்டம் இ) தேவராட்டம் ஈ) மயிலாட்டம்
5. சிலப்பதிகாரம், மணிமேகலை அமையப்பெற்ற ஓசை ______
   அ) அகவலோசை ஆ) துள்ளலோசை இ) தூங்கலோசை ஈ) செப்பலோசை
6. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்று கூறுபவர் ______
   அ) மு.கு.ஜகந்நாத ராஜா ஆ) மணவை முஸ்தபா இ) பாரதி ஈ) அப்புசாமி
7. நெடுவில் குன்றம் என அழைக்கப்படும் இடம் எது?
   அ) சுருளிமலை ஆ) கொல்லிமலை இ) பச்சைமலை ஈ) விராலிமலை
8. மற்றைய நோக்காது அடிதோறும் வாள்பொருள் அற்று அற்று ஒழுகும் அஃது ______ பொருள்கோள்.
   அ) ஆற்றுநீர் ஆ) விற்பூட்டு இ) நிரல்நிறை ஈ) மொழிமாற்று
9. 'தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந் தாங்க' கம்பராமாயணத்தில் இவ்வரி எந்த படலத்தில் இடம்பெறுகிறது?
   அ) கங்கைப் படலம் ஆ) கங்கை காண் படலம் இ) நாட்டுப்படலம் ஈ) ஆற்றுப்படலம்
10. ஜெயகாந்தனின் படைப்புகள் உணர்ச்சி சார்ந்த எதிர்வினைகளாக இருப்பதால் பெற்றுத்தந்த பட்டம் யாது?
   அ) படைப்பாளி ஆ) போராளி இ) சிறுகதை மன்னன் ஈ) புரட்சி எழுத்தாளன்
11. சிறப்புப் பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் வருவது ______.
   அ) வேற்றுமைத் தொகை ஆ) பண்புத் தொகை
   இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி :

வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறைய
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோ? மரகதமோ? மறிகடலோ மழை முகிலோ?
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
   அ) பிள்ளைத் தமிழ் ஆ) திருவிளையாடல் புராணம்
   இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu


13. இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள காண்டம் எது?
அ) அயோத்தியா காண்டம் ஆ) கிட்கிந்தா காண்டம்
இ) பால காண்டம் ஈ) யுத்த காண்டம்

14. வெய்யோன் என்ற சொல்லின் பொருள் என்ன?
அ) திங்கள் ஆ) பகலவன் இ) சந்திரன் ஈ) இரவோன்

15. இப்பாடலின் ஆசிரியர்
அ) கீரந்தையார் ஆ) குமரகுருபரர் இ) இளங்கோவடிகள் ஈ) கம்பர்

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 4x2=8
( 21ஆம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க :
அ) ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி.
ஆ) நிலத்தின் அடிப்படையில் சங்க கால மக்களின் வாழ்வியல் அமைந்திருந்தது.

17. ஜெயகாந்தன் தான் எழுதுவதின் பயனை எவ்வாறு குறிப்பிடுகிறார்?

18. சந்தப் பாடல்களின் சிறப்பினைக் கூறுக.

19. ஒரு மொழியும் அதன் இலக்கியமும் எங்ஙனம் அமையும்?

20. சங்க இலக்கியங்கள் இன்று நமக்குப் பெரும் வியப்பாய் இருக்கக் காரணம் கூறுக.

21. கண் - என முடியும் குறளை எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க : 5x2=10

22. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க :
அ) எழுகதிர் ஆ) முத்துப்பல்

23. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக :
அ) இயற்கை - செயற்கை ஆ) சிறு - சீறு

24. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
அ) அள்ளி இறைத்தல் ஆ) கண்ணும் கருத்துமாக

25. கலைச்சொல் தருக :
அ) Cultural boundaries ஆ) Myth

26. முதனிலைத் திரிந்த தொழிற்பெயரைச் சான்றுடன் விளக்குக.

27. உவமைத் தொகையைச் சான்றுடன் விளக்குக.

28. படுகிறோம் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி: 2x3=6

29. மனிதனால் காற்று எவ்வாறு மாசு அடைகிறது?

30. கலிங்கத்துப்பரணி விருந்தினருக்கு எவ்வாறு உணவிட வேண்டும் என்று கூறுகிறது?

31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க :
தேவராட்டம், வானத்துத் தேவர் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம். உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படும் 'தேவ துந்துபி'

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி. இந்தக் கலை, வேட்டி கட்டியும் தலையிலும் இடையிலும் சிறுதுணி கட்டியும் கால்களில் சலங்கை அணிந்தும் எளிய ஒப்பனையுடன் நடத்தப்படுகிறது.

1. தேவராட்டத்தின் பொருள் என்ன?
2. உறுமி என அழைக்கப்படுவது எது?
3. தேவராட்டக் கலையின் உடைகள் யாவை?

பிரிவு - 2 **2 x 3 = 6**

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி:
(34வது வினாவிற்கு கட்டாயமாக விடையளி)

32. ஏழை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ? - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.
33. கவிஞரின் சிந்தனையில் 'சித்தாளு' கவிதையின் கருத்தைப் பற்றி என்ன எண்ணுகிறார்?
34. அடிபிறழாமல் எழுதுக :
'தூசும் துகிரும்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல் **(அல்லது)**
'சிறுத்தாம்பு' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடல்

பிரிவு - 3 **2 x 3 = 6**

எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் சுருக்கமாக விடையளி.

35. ஆற்றுநீர்ப் பொருள்கோளைச் சான்றுடன் விவரி.
36. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் - இக்குறட்பா விற்கு அலகிட்டு வாய்பாடு தருக.
37. தன்மையணியை சான்றுடன் விளக்குக.

பகுதி - IV **5 x 5 = 25**

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:

38. அ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்கும் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக. **(அல்லது)**

ஆ) மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.

39. அ) புதிதாக இரு சக்கர ஊர்தி வாங்கி, ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உறவினருக்கு, முக்கியச் சாலை விதிகளை விளக்கி, அவற்றைக் கடைப்பிடிக்க வலியுறுத்திக் கடிதம் ஒன்று எழுது.

(அல்லது)

ஆ) நீங்கள் சென்று வந்த அரசுப் பொருட்காட்சியின் சிறப்புகளை விளக்கி நண்பனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக :



www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



41. படிவம் :- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராக சேர்க்கை விண்ணப்பத்தை பூர்த்தி செய்க. (தேர்வர் தன்னை கபிலன் என்க)

42. அ) கடலில் புயலின் தாக்கத்தினால் நீங்கள் பார்த்த அல்லது உங்களுக்கு ஏற்பட்ட பதற்ற மனநிலை குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க :

Respected ladies and gentlemen, I am Selvan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: **3 x 8 = 24**

43. அ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பர் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

(அல்லது)

ஆ) 'ஜெயகாந்தன் தன் படைப்புகளைத் தனித்தன்மையில் தருபவர்' என்ற கூற்றினை ஆய்வு செய்க.

44. அ) 'அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) 'அறிவியலார் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப்பயணம்' என்னும் கதை வெளிப்படுத்தும் கருத்துக்களை விவரிக்க.

45. அ) தமிழர் உணவும் விருந்தோம்பலும் எனும் தலைப்பில் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பு ஒன்றை தருக.

குறிப்புகள் : முன்னுரை - சாலைப் பாதுகாப்பு, உயிர் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி - ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம். விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com